"உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் 40 பயனாளிகளுக்கு

# ரூ. 11 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், செப். 6 -

கரூர் மாநகராட்சி வார்டு எண் 29, 30 மற்றும் கரூர் ஊராட்சி ஒன்றியம். நெரூர் வடக்கு பகுதிகளுக்கு "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்றது. கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். 40 பயனாளிகளுக்கு ரூ. 11லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

பின்னர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு மக்களிடம் சிறந்த வரவேற்பினைப்பெற்ற ஒரு உன்னதமான திட்டமாக "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் அமைந்துள்ளது. கரூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமானது 179 இடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு 3ம் தேதி வரை 102 முகாம்கள் நிறைவு பெற்றுள்ளது. இம்முகாம்கள் மூலம் இது வரை 73.917 மனுக்கள் வரப்பெற்றுள்ளன. இதில் 26,194 மனுக்கள் கலைஞர் உரிமைத் தொகைகோரி விண்ணப்பங்களாக பெறப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் பெறப்பட்ட ஒரு சில மனுக்களுக்கு அந்தந்த முகாம்களிலேயே தீர்வு அளிக்கப்படுகிறது. ஒரு சில மனுக்களுக்கு ஒரு வார காலம் எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்வுகாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து மனுக்களுக்கும் 45 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 45 நாட்களுக்குள் அனைத்து மனுக்களுக்கும் தீர்வு காண மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து வருவாய்த் துறையின் சார்பாக 21 நபர்களுக்கு வகுப்புச் சான்று. வருமானச் சான்று உள்ளிட்ட சான்றிதழ்களையும், கூட்டுறவுத் துறையின் சார்பாக 5 நபர்களுக்கு ரூ 11லட்சம் மதிப்பீட்டில் மகளிர் சிறு வணிக கடனுதவிகள் மற்றும் மகளிர் உதவிக்குழு கடனுதவிகள், கரூர் மாநகராட்சியின் சார்பாக 8 நபர்களுக்கு சொத்துவரி பெயர் மாற்றம். காலிமனை வரி விதிப்பு, பிறப்பு சான்றிதழ்கள். எரிசக்தித் துறையின் சார்பாக இணைப்பு பெயர் மாற்றத்திற்க்கான ஆணைகள், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக 2 நபர்களுக்கு சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான ஆணைகளும் என மொந்தம் 40 நபர்களுக்கு ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வி. செந்தில்பாலாஜி வழங்கினார்.

இம்முகாமில் மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி ஆணையர் கே.எம். சுதா, கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்எஸ். ராஜா, மாமன்ற உறுப்பினர்கள்உள்ளாட்சிபிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முகாம்களில் பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.



"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் சிறப்பு முகாம்களின் ஒருபகுதியாக, கரூர் தொகுதி, கரூர் கிழக்கு ஒன்றியம், நெரூர் வடக்கு பகுதி சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற சிறப்பு முகாமில், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்றுக்கொண்டு, அனைவருக்கும் உணவு வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# கழக முப்பெரும் விழா - துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

## கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!



கடலூர், செப். 6 -

கழக முப்பெரும் விழா, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் குறித்து கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வே கணேசன் அறிக்கை விடுத்துள்ளார் அவரது அறிக்கை கீழ் வருமாறு:

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்கவும்,கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படியும், ஒன்றிய கழக நகர கழக , பேரூர் வார்டு மற்றும் கிளைக் கழகங்களில் 05.09.2025, 06.09.2025, 07.09.2025 ஆகிய நாட்களில் கழக கூட்டங்கள் நடத்தப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள் :

1 கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்ச்சியால் தமிழ்நாட்டில் 2 கோடி 54 லட்சம் உறுப்பினர்கள் கழகத்தில் இணைந்துள்ளனர்.

இதற்காக எங்களது கிளைக் கழகம் சார்பில் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2 அந்தந்த ஊரில் சேர்க்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தனித்தனியாக குறிப்பிடவும்.

3 வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில், எங்களது கிளைக் கழகம் சார்பில் அயராது உழைத்து, அதிக வாக்கு வித்தியாசம் பெற்று, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை ஏழாவது முறையாக அரியணை ஏற்ற பாடுபடுவோம்.

4 வருகிற செப்டம்பர் 17ஆம் தேதி, கழக முப்பெரும் விழா கரூரில் நடைபெற உள்ளது. அதில் எங்களது கிளைக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்வோம்.

5 வரும் நவம்பர் 27ஆம் தேதி, துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை, தங்களது கிளைக் கழகங்களில் சிறப்பாகக் கொண்டாட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

தலைமை; மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. — புழல் 24வது வட்டக் கழகச் செயலாளர்

# கே.பி.சுந்தரேசன் - கே.பி.எஸ்.அன்பரசு இல்லத் திருமண விழா!

## ஆ.இராசா எம்.பி. — அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் — கழக முன்னணியினர் வாழ்த்து!



சென்னை, செப்.6 -

மாதவரம் தெற்கு பகுதி புழல் 24 வது வட்டக் கழக செயலாளரும் கழக மூத்த முன்னோடியுமான கே.பி. சுந்தரேசன் - அந்தோணி மேரி ஆகியோரின் மகன் வழி பேத்தியும் எஸ்.கே. பக்தவச்சலு - ராஜேஸ்வரி ஆகியோரின் மகள் வழி பேத்தியும் கழக வழக்கறிஞர் அணி கே.பி.எஸ்.அன்பரசு - திருமதி மகேஸ்வரி இணையரின் மூத்த மகள் டாக்டர் எஸ்.ஏ.அன்புமதி - சென்னை 66 புழல், கதிர்வேடு, திருவள்ளுவர் தெருவில் வசிக்கும் எஸ்.சிவகுமார் - திருமதி எஸ். மெட்டில்டா இணையரின் இளைய மகன் எஸ்.யுவராஜ் ஆகியோரின் திருமண விழா 15.9.2025 திங்கட் கிழமை மாலை 6:30 மணி அளவில் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துகளுடன் புழல், காவாங்கரை ஜி.என்.டி. சாலையில் அமைந்துள்ள ராணி சங்குபதி திருமண மஹாலில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு 24 ஆவது வட்டக் கழக செயலாளர் கே.பி.சுந்தரேசன், மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம் ஆகியோர் வரவேற்புரை யாற்றுகின்றனர்.

புழல் எம்.நாராயணன், எஸ்.நந்தகோபால், மிசா பா.மதிவாணன், என்.பரந்தாமன், சி.ஜே.ரவி, பி. கென்னடி, என்.எழில் ராவணன், எம்.அந்தோணி, மலர்கொடி செல்வராஜ், ஏ.ஜெய்கர், பிஎஸ்என்எல் நாகராஜன், எம்.கௌதமன், எம்.உதயபாரி, இ. எஸ்.தமிழ்கொடி உள்ளிட்ட பலர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மண விழாவிற்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மணவிழாவில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் மண்டலப் பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி., அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்புரை யாற்றுகின்றனர்.

மேலும் இவ்விழாவில் எஸ்.சசிகாந்த் செந்தில் எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ., டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., இ.ஏ.பி. சிவாஜி, பி.எஸ்.அமுல்ராஜ், சங்கீதா பாபு, ஆர்.பி.தர்மலிங்கம், ஆர்.முனியாண்டி, எம்.வரதராஜன், டாக்டர் டி.கோபால், டாக்டர் நா.சந்திரபாபு, ஐசிஎப் வ.முரளிதரன், பெரியாரண்பன், டி.சி. ராஜேந்திரன், ஏ.வி.ராஜன், எம்.ஜெயசீலன், லயன் எஸ்.வி.மாணிக்கம், எஸ். சுந்தரேசன், ஜி.சொக்கலிங்கம், எம்.முருகேசன், கே.கோபி, எம்.அருணாச்சலம், வி.பன்னீர்செல்வம், எம்.முத்துராமன், டி. குபேந்திரன், மேனகா நித்யானந்தம், ஜெ.ஜெய்மதன், ஜி.ராஜேந்திரன், பம்மதுகுளம் திருநாவுக்கரசு, மா.மணி, இ.பாஸ்கரன், இரா.பாபு, ஆர்.இ. ஆர்.விப்ர நாராயணன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றியக் கழக நிர்வாகிகள், மண்டலக் குழுத் தலைவர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

24 ஆவது வட்டப் பிரதிநிதி கே.பி.பி.அறிவழகன், வழக்கறிஞர் அணி கே.பி. எஸ்.அன்பரசு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# தென்காசி மின் கழக தொ.மு.ச ஆர்.தங்க மாரிமுத்து இல்ல மணவிழா!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்து!

தென்காசி.செப்.6

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன் கோவிலில், சங்கரன்கோவில் ராஜபாளையம் சாலையில் உள்ள சுரித்திக்ஸ் மகாலில் மின் கழக தொ.மு.ச. திட்ட தலைவர் ஆர்.தங்க மாரிமுத்து இல்ல மணவிழா நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று சீர்திருத்த திருமண விழாவை நடத்தி வைத்தார்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் மின் கழக தொ.மு.ச.திட்ட தலைவர் ஆர். தங்கமாரிமுத்து டி. மல்லிகா ஆகியோர் களின் புதல்வன் மருத்துவர் டி. ஜெயராமுக்கும், எம். சோலைராஜன், எஸ். சசிவேணி ஆகியோர்களின் புதல்வி மருத்துவர் எஸ்.துர்காப்பிரியா ஆகியோரது திருமண நிகழ்வு சங்கரன்கோவில்ராஜபாளையம் மெயின் சாலையில் அமைந்துள்ள சுரித்திக்ஸ் மஹாலில் நடைபெற்ற திருமண விழா நிகழ்வு கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமை ஏற்று சீர்திருத்தத் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்கள்.

அதன் பின்னர் நடைபெற்ற நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது.மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசியதாவது.

இந்த திருமண நிகழ்வு இனிதே நடத்தி முடிந்தி ருக்கிறது.திருமணத்தை நடத்திக் கொடுக்க வாய்ப்பு கொடுத்த மண வீட்டாருக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.இனிதாக நடந்தேறி இருக்கக்கூடிய இந்த திருமண அழைப்பிதழை பார்க்கும் பொழுது இருவருமே மருத்துவர்கள் என்று பார்க்கும் பொழுது மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது.இந்த மேடையே திராவிட இயக்கத்தின் வெற்றிக்கு ஒரு சான்றாக வும் அமைந்திருக்கிறது. என்ற அந்தப் பெருமை நம் அத்தனை பேர்களின் மனதிலும் எழுகிறது.நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு இருக்கக்கூடிய திராவிட முன்னேற்ற கழகத்தின் மூத்த முன்னோடிகளே, முன்னணி செயல் வீரர்களே, நண்பர்களே, மண வீட்டு நிகழ்ச்சிக்கு வந்திருக்கக்கூடிய உற்றார், உறவினர்களே உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.இந்த மண வீட்டு நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதில் ஒரு பெருமையும் எங்களுக்கெல்லாம் இருக்கிறது.

தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்திலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற குடும்பம், மணமகனின் குடும்பம்.எந்த சோதனைகள் வந்தாலும் கழகம் அறிவிக்கக்கூடிய எந்தப் போராட்டமாக இருந்தாலும், அவர்களின் குடும்பங்களை சார்ந்தவர்கள், மணமகன் தந்தை தங்க மாரிமுத்து அவர்கள் அதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள தவறியதே கிடையாது.அப்படிப்பட்ட ஒரு குடும்பத்தின் இங்கே இருக்கக்கூடிய மணமகளும், மணமகனும் தன்னுடைய சமூக பொறுப்பை உணர்ந்தவர்களாக இன்று தாங்கள் அடைந்திருக்க கூடிய மேன்மை எல்லாம் மக்களுக்கு தொடர வேண்டும். அடுத்த தலைமுறைக்கும் சென்றடைய வேண்டும் என்ற அந்த விழிப்புணர்வை பெற்றவர்களாக தான் இன்று இந்த மேடையில் மருத்துவர்களாக அமர்ந்திருக்கிறோம் என்றால் அதற்கு எத்தனை பேர் தந்தை பெரியார் அவர்களிலே தொடங்கி பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் இன்று நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் என்று எத்தனை பேருடைய உழைப்பு சிந்தனை, அதில் இருக்கிறது என்பதை உணர்ந்த மணமக்களாக அதை அடுத்த தலைமுறைக்கு நிச்சயமாக கொண்டு செல்ல வேண்டும், என்ற அதைக் கருத்தினை கொண்டு உழைக்கக் கூடியவர்களாக தங்களுடைய தேர்ந்து எடுத்துக் கொண்டிருக்க கூடிய தொழிலில், தொழில் நிலை எந்த அளவுக்கு கவனமும், அக்கறையும் பெற்றவர்களாக இருக்கிறார்களோ, அதே போல இந்த சமூகத்தை பற்றிய பொறுப்பும், அக்கறையும் கொண்டவர்களாக பணியாற்ற வேண்டும், பணியாற்ற வேண்டும் என்று அவர்களை வாழ்த்தி மகிழ்கிறேன்.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பேசினார்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் தங்கவேலு, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி பொதுக்குழு உறுப்பினர் தேவா, மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், புனிதா, ராஜதுரை, பொருளாளர் இல.சரவணன், ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை, லாலா சங்கரபாண்டியன், சேர்மதுரை, குணசேகரன், பால்ராஜ், ராமச்சந்திரன், கிறிஸ்டோபர், நகர செயலாளர்கள் பிரகாஷ், அந்தோணிசாமி, நகர்மன்ற தலைவர் கௌசல்யா, மாவட்ட அணி அமைப்பாளர்கள் சிவசங்கரி, உதயகுமார், அழகுதுரை, பேரூர் செயலாளர்கள் சேதுசுப்பிரமணியன், குருசாமி, மாரிமுத்து, தொ.மு.ச மின் வாரியம் மகாராஜன், நடராஜன், உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் — சென்னை தென்மேற்கு மாவட்ட

# தொழிலாளர் அணியின் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் என்.வடிவேல் அறிக்கை!

சென்னை, செப்.6-

சென்னை தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் என்.வடிவேல் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னை தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் புதிய நிர்வாகிகள் அறிமுகம் கூட்டம் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் / மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு தலைமையில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இன்று (06.09.2025 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் நடைகிறது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மயிலை பகுதி கிழக்கு, மேற்கு, தியாகராயர் நகர், கிழக்கு, மேற்கு பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.வடிவேல் கேட்டுக் கொண்டுள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் முன்னாள் மாவட்ட பிரதிநிதி முன்னாள் பம்மத்துகுளம் ஊராட்சி செயலாளர் ப.ராமகிருஷ்ணன் மற்றும் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரா.கவியரசன் ஆகியோரின் இல்ல விழா செங்குன்றம் அம்பேத்கர் நகர் காமாட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் தே.இளம்பரிதி, செ.யுவராஜ், கிளை செயலாளர்கள் கே. சந்தானம், எம்.தேவா, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆ.கண்ணன், வே. கார்த்திக், எம்.எஸ்.மணிகண்டன், டேவிட், குறளரசன், தினேஷ், சு.சங்கர், ப.ராஜேஷ்கண்ணன், எம். சரவணன், டி.கே.சிவசூர்யா, கார்த்திக், ஹரிஸ், ஜிவா, நீத்திஸ், கே.விக்கி, மற்றும் கழக உடன்பிறப்புகள் பங்கேற்று வாழ்த்தினர்.

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் திருநெல்வேலி மத்திய மாவட்டம் - திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் கோவை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

**திருநெல்வேலி கிழக்கு மாநகரம்**

அமைப்பாளர் - மேரி 53/பி, 9வது தாமஸ் தெரு, பெருமாள்புரம், திருநெல்வேலி - 627007.

துணை அமைப்பாளர்கள் - 1) இந்திரா இ6-1, உலகம்மன் கோவில் தெரு, பாளையங்கோட்டை - 627002. 2) மாரியம்மாள் திருநெல்வேலி. 3) சின்னத்தாய் 3ஏ, காந்தி நகர் 5வது தெரு, பாளையங்கோட்டை - 627002. 4) டி. சகாய ஜீலியட் மேரி எம்.ஐ.ஜி. 1886, மகிழ்ச்சி நகர், பாளையங்கோட்டை - 627007. 5) சுப்புலெட்சுமி 2-1, திருஞான சம்பந்த நாயனார் தெரு, பாளையங்கோட்டை. 6) சித்ரா பௌர்ணமி 19, செந்தில் நகர், பாளையங்கோட்டை- 627002

**திருநெல்வேலி மேற்கு மாநகரம்**

அமைப்பாளர் - சீதாலெட்சுமி 3எச்1/2, புதுக்கிராமம் சுந்தர விநாயகர் கோவில் தெரு, பேட்டை - 627004.

துணை அமைப்பாளர்கள் - 1) சுப்புலெட்சுமி 40ஏ, தடிவீரன் கோவில் கீழத் தெரு, திருநெல்வேலி டவுன் - 627006. 2) ராஜேஸ்வரி 121, வினைதீர்த்த விநாயகர் கோவில் தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004. 3) கோமதி 71-1, செக்கடி தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004. 4) பிஸ்மி சகர்பானு எம்.ஜி.பி. 4வது வடக்கு தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004.

### கோவை வடக்கு மாவட்டம்

கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி லதா அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **திருமதி ஆர்.சுமதி** (காரமடை ரோடு, மேட்டுப்பாளையம், கோவை) அவர்கள், கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-09-2025.

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம் தாமலேரிமுத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் தாமலேரிமுத்தூர் பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் விழாவில் மாவட்ட கழக செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க. தேவராஜி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் பெறுவதற்கான ஆணையை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், நகர செயலாளர் ம.அன்பழகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப் பாளர் மு.க.அருள்நிதி, ஒன்றிய நிர்வாகிகள் மு.க.தயாநிதி, மோகன், துளசி, ஒன்றிய கவுன்சிலர் கலாஆஞ்சி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.